# ஆத்ம ஜோதி



காஞ்சி காமகோடி பீடாதிபதி
சுவாமி சந்திர சேகரேந்திர சுவாமிகள்.

உ


# ஆத்ம  ஜோதி

ஓர் ஆத்மீக மாதவெளியீடு

எல்லா உலகிற்கும் இறைவன் ஒருவனே
எல்லா உடலும் இறைவன் ஆலயமே—சுத்தானந்தர்.

| சோதி 6 | ஜயவருஷ புரட்டாதிமீ 1 ந் திகதி | சுடர் 11 |


## பொருளடக்கம்.


| | விஷயம் | பக்கம் |
|---|---|---|
| 1 | தக்ஷிணாமூர்த்தி தோத்திரம் | 281 |
| 2 | சிவதொண்டின் செப்பருஞ் சிறப்பு | 282 |
| 3 | ஆலய அர்ச்சகர் பயிற்சிக் கூட்டம் | 283 |
| 4 | இந்து சமயக் கல்லூரி | 286 |
| 5 | கௌடர்களும் திராவிடர்களும் | 289 |
| 6 | பாடிடுவோம் அருள் நெறியை ! | 291 |
| 7 | பகுத்தறிவு வினாக்களும்... விடைகளும் | 292 |
| 8 | ஸ்ரீகேதார் - பத்திரியாத்திரை | 293 |
| 9 | அப்பூதியடிகள் மனைவியார் | 297 |
| 10 | உன் சமயமே......... தூற்றுதே | 299 |
| 11 | பக்தி நிலையில் பாரதியார் | 302 |
| 12 | ஸ்ரீமத் சுவாமி சிவானந்தஜீ மகாராஜ் | 305 |
| 13 | சிவானந்த வணக்கம் | 308 |
| 14 | செய்தித்திரட்டு | (அட்டை 3ம் பக்கம்) |



### ஆத்ம ஜோதி

ஆயுள் சந்தா ரூ. 75. வருட சந்தா ரூ. 3.
தனிப்பிரதி சதம் 30

கௌரவ ஆசிரியர்: க. இராமச்சந்திரன்
60, டீல் பிளேஸ், கொள்ளுப்பிட்டி, கொழும்பு

பதிப்பாசிரியர்:— நா. முத்தையா
ஆத்ம ஜோதி நிலயம் நாவலப்பிட்டி [சிலோன்]




# தக்ஷிணா மூர்த்தி தோத்திரம்.

[ஆதி சங்கரர் அருளியது.]

மவுனமா முரையாற் காட்டு மாப்பிரம வத்து வாலன்
சிவநிலைத் தவர்சற்சீடர் செறிகுரு வரன்சிற் கைய
னுவகையோ ருருவன்றன்னு ளுவப்பவன் களிமு கத்த
னவனையாந் தென்பான் மூர்த்தி யப்பனை யேத்துவோமே.

*பொழிப்புரை: மௌனமாகிய வியாக்கியானத்தால் தெரிவித்த பரப்பிரம்ம சொரூபனும், பாலனும், பிரம்மநிஷ்டை முனிகளான உத்தம சீடர்கள் சூழவிருக்கும் குரு சிரேஷ்டனும், சின்முத்திரைக் கையனும், ஆனந்த மூர்த்தியும், தன்னிலேயே ரமிப்பவனும், சந்தோஷ முகத்தனும், ஆகிய பரமபிதாவான அந்தத் தக்ஷிணாமூர்த்தியை நாம் துதிப்போம்.*

மண்புன லனல்கால் வான மதிகதி ரோன்பு மானு
மென்றுளிர் சராசரஞ்சே ரிதுவெவ னெட்டு மூர்த்த
மெண்ணுவார்க் கிறைநி றைந்தோ னெவனினன் னியஞ்சற்றின்றாந்
தண்ணருட் குருவா மந்தத் தக்ஷிணாமூர்த்தி போற்றி!

*பொழிப்புரை: பூமி, ஜலம், நெருப்பு, காற்று, ஆகாசம், சூரியன் சந்திரன், புருடன் என்று சராசரமாய்த் தோற்றுமிது எவனது அஷ்டமூர்த்தமோ, விசாரிப்பார்க்கு பரனாய், எங்குந்நிறைந்த எவனைக்காட்டிலும் அன்னியஞ் சிறிதுமல்லையோ, அவ்வதிசாந்த கிருபாமூர்த்தியான தக்ஷிணாமூர்த்தி குருவுக்கு நமஸ்காரம்.*

தமிழாக்கம்; பகவான் ஸ்ரீரமண மஹரிஷிகள்.

## சிவதொண்டின் செப்பருஞ் சிறப்பு.

*[ஸ்ரீ யோகர் சுவாமிகள் அருளியது.]*

சிவதொண்டு செய்வார்க்குச் செல்வமுண்டு கல்வியுண்டு
சிவதொண்டு செய்வார்க்குச் சீருமுண்டு பேருமுண்டு
சிவதொண்டு செய்வார்க்குச் சிந்தைத் தெளிவுமுண்டு
சிவதொண்டு செய்வார்கள் சேருவாரோ தீநெறியில்,

சிவதொண்டு செய்வார்கள் திசையெட்டு மாளுவார்
சிவதொண்டு செய்வார்கள் சென்மமல நீங்குவார்
சிவதொண்டு செய்வார்கள் தேவரையு மேவல்கொள்வார்
சிவதொண்டு செய்வார்கள் செத்துப் பிறக்கார்கள்.

சிவதொண்டு செய்து திருமா ஆலகாண்டான்
சிவதொண்டு செய்துதிரு வாரூரன் சிவமானன்
சிவதொண்டு செய்தரசன் சேர்ந்தான் கழல் முன்னாள்
சிவதொண்டு செய்வார்க்கு முண்டோ குறைகூறு,

சிவதொண்டு செய்வார்க்குச் சினமில்லை அச்சமில்லை
சிவதொண்டு செய்வார்க்குத் தீயவகங் கா்ரமில்லை
சிவதொண்டு செய்வார்க்கு இரவும் பகலுமில்லை
சிவதொண்டு செய்வார்க்குப் பழயூ ணுணவுமில்லை.

சிவதொண்டு செய்வார்க்குச் சாந்தம் பொறுமையுண்டு
சிவதொண்டு செய்வார்க்குத் திரிகால வுணர்ச்சியுண்டு
சிவதொண்டு செய்வார்க்குத் தீயபிணி நோயில்லை
சிவதொண்டு செய்வார் தெய்வமே போல்வார்.

### வேறு.

"தன்னை யறியத் தனக்கொருகே டில்லை"யென
முன்னைப் பெரியோர் மொழிந்தனரால்—தென்னைபனை
சேரிலங்கை வாழுஞ் சிவநேயச் செல்வர்காள்!
தேரீரிச் சீவ்ன் சிவம்,

*[சிவதொண்டன்]*



## ஆலய அர்ச்சகர் பயிற்சிக் கூடம்.

*[ஆசிரியர்,]*

இலங்கையின் பலபாகங்களிலும் வ்சிக்கும் இந்துப் பிரமுக்ர்கள் ஒன்று சேர்ந்து, ஓர் அகில இலங்கை இந்து மகாமன்றத்தை நிறுவுதற்கு எடுத்துள்ள முயற்சிகளைக் கண்டு மகிழ்ச்சி யடைகின்றோம். அந்த மன்றத்தின் ஆக்கக் குழுவின் கூட்டமொன்று அண்மையில் நடைபெற்றது, இந்துக் கோயில்களில் அர்ச்சகர் தொழில் பார்ப்பவர்கட்கு வேண்டிய வேதாகம, .சமய சாஸ்திர, தோத்திர அறிவை அளிப்பதற்கு ஓர் கலாசாலையை நிறுவுதல் புதிய மன்றத்தின் முக்கிய நோக்கங்களுள் ஒன்றாக அமைதல் வேண்டுமென அக்கூட்டத்தில் சமர்ப்பித்துள்ளோம்,

இந்துக்களினிடையே சமய சாஸ்திர அறிவு மிகவும் அருகிவிட்டது, சகஸ்ரநாம அர்ச்சனைக்கும் அஷ்டோத்திர அர்ச்சனைக்குமிடையேயுள்ள வித்தியாசம் என்னவென்றுகேட்டால், அந்த அர்ச்சனைகளைச் செய்விப்போர் பலர், முந்தியதற்கு கட்டணம் இரண்டரைரூபாய் பிந்தியதற்கு அரைரூபாய் என்று மாத்திரம் சொல்லக்கூடிய பரிதாப நிலைக்கு வந்துள்ளோம். அந்த அர்ச்சனைகளைச் செய்யும் அர்ச்சகர்களுட் சிலரே அவற்றில் அடங்கிய மந்திரங்களின் கருத்தையோ தத்துவங்களையோ விளங்காதவர்களாய் உளர், மேலும். பிரதிஷ்டைகும்பாபிஷேகம் போன்ற முக்கிய கருமங்களைச் செய்வதற்கு போதிய அறிவும் ஆற்றலும் படைத்த குருக்கள்மார் இலங்கையில் இப்போ இல்லையென்றும் தென்னிந்தியாவிலிருந்தே அழைக்கவேண்டுமென்றும் ஓர் அபிப்பிராயம் நாடெங்கும் பரவியிருக்கின்றது. அப்படியேயாயின், நாம் விரும்பும்படி அவர்கள் அங்கிருந்து வரமுடியாத, அவர்கள் விரும்பும்படி இங்கிருந்து பணம் கொண்டு திரும்பமுடியாத சட்டங்களின் கஷ்டங்களுமுண்டு. இவற்றையெல்லாம் ஆலோசித்து, சோதிட சாஸ்திரத்தையே சந்தர்ப்பத்திற்கும் அவரவர் வசதிக்கும் பொருந்தத் திரித்துக் கூறும் நிலைமைகூட ஏற்படலாமென அஞ்சவேண்டியுள்ளது.

அதுமாத்திரமன்றி, நமது ஆலயங்களில் வடமொழிக்கு இது வரையில் இருந்துவந்த மதிப்புக்குறைய வேண்டுமென்ற பேச்சும் கிளம்பியுள்ளது. தூத்துக்குடி, கோயம்புத்தூர் முதலிய வட்டாரங்களில் தமிழிலேயேஅர்ச்சனைகள் நடைபெறஆரம்பித்துவிட்டன, இவற்றைக்கண்டு அஞ்சிய தென்னிந்திய அர்ச்சகர் சங்கம் அண்மையில் செங்கல்பட்டில் கூடிக் கண்டனத் தீர்மானம் நிறைவேற்றியுள்ளது, என்றுமுள தென்மொழி பக்திக்குரியதும் அரியதும் எனில், தொன்று தொட்டுள்ள வடமொழி அற்புத மந்திரசக்தி வாய்ந்ததாகும், இந்த உண்மையை எவரும் மறுக்கவேமுடியாது. சுயமொழிப்பற்று பாராட்டத்தக்கதே; வேண்டற்பாலதே, ஆனால் அது புறமொழி வெறுப்பாக மாறி மதங்கொண்டால் விளைவது அனர்த்தமே. ஈழத்தைப் பொறுத்தமட்டில், சென்ற முப்பத்து மூன்று வருஷங்களாக ஆரிய—திராவிட பாஷாபிவிருத்திச் சங்கம் செய்துள்ள அருந் தொண்டின் பயனாக துவேஷ மனப்பான்மை இன்னுந் தலைகாட்டவில்லையெனலாம்.

இவ்வித கிளர்ச்சி ஒருநாள் தமிழ் பேசும் மக்களிடையே தோன்றப்போவதைத் தீர்க்கதரிசனம் கண்டுபோலும். இன்று தமிழ் நாட்டில் ஞானக்கதிர் வீசிக் கொண்டிருக்கும் காஞ்சி காமகோடி பீடாதிபதி **ஸ்ரீ சந்திர சேகரேந்திர சுவாமிகள்** (அட்டையில் ஒளி வீசுவது அவரின் முகப்பொலிவே) இன்றைக்குச்சரியாக இருபத்திரண்டு ஆண்டுகட்கு முன்னரேயே கீழ்க்கண்ட அறிவுரையை அருளியுள்ளார்,

> *"பக்தி மார்க்கத்தில் செல்பவர்கள் எந்தப் பாஷையில் வேண்டுமானாலும் தோத்திரம் செய்யலாம். ஆனால், கர்மமார்க்கத்தில் செல்கிறவர்கள் சமஸ்கிருதம் படித்தே தீரவேண்டும். கர்மாக்களின் அனுஷ்டான முறையைச் சொல்லுங் கிரந்தங்களும் மந்திரங்களும் சமஸ்கிருதத்திலேயே இருக்கின்றன.*
>
> *ஆகையால், தேவர்களோடு சம்பந்தம் வைத்துக் கொள்ள விரும்பும் சகலரும் வருணவித்தியாசமின்றி சமஸ்கிருத பாஷையைப் படிக்கவேண்டும்."*

சம்ஸ்காரம் செய்யப்பட்டது என்பதே 'சமஸ்கிருதம்' என்னும் பதத்தின் அர்த்தமாகும், அதற்குரிய பழைய பெயர் 'தேவ



வாக்கு.' "தேவபாஷையில் இக்கதை செய்தவர் மூவரானவர்" என்று கவிச்சக்கரவர்த்தி கம்பன் தான் இயற்றிய இராமாயணத்தில் கூறியிருப்பதையும் கண்டுகொள்க,

மேலே குறிப்பிட்ட பிரச்சனைகளையெல்லாம் துருவி ஆராய்ந்த 'தொண்டன்" ஆசிரியர் மஹா வித்துவான் ஆறுமுக நாவலர் அவர்கள் தமிழ் நாட்டுக்குச் சமர்ப்பித்துள்ள கோரிக்கைகளை அடுத்த பக்கங்களில் வெளியிடுகின்றோம், சமயத் தலைவர்களும், மடாதிபதிகளும், வடமொழி தென்மொழி இரண்டிலும் நல்லறிவுடைய பக்தர்களும் கலந்து ஆலோசித்து, இந்து சமயக் கல்லூரிகளை தென்னாட்டிலும் ஈழத்திலும் நிறுவுதற்கு முன்வரவேண்டும், "ஆத்மஜோதி" அபிமானிகளின் கருத்தும் கவனமும் இவ்விஷயத்தில் முன்னரேயே ஈடுபட்டிருப்பதை நாம் நன்கறிவோம். ஆகையால், அவர்களின் ஒத்துழைப்பு எல்லாவித முற்போக்கான சமயத் தொண்டுகளிலும் என்றென்றைக்கும் இருக்கவே செய்யும்.

## சிவானந்தர் தோத்திரம்.

அண்டமெலாந் தொழுதேத்தும் அண்ணல் தோன்றும்
அருமறையின் பொருள்பரவும் அருவி தோன்றும்
மண்டலத்தின் பிணிநீக்கும் மருந்து தோன்றும்
மயல்வாழ்வை உயர்வாக்க மார்க்கந் தோன்றும்
பண்டுதவ முனிவர்நெறி இன்றுந் தோன்றும்
பார்மீது பரவாழ்வின் பண்பு தோன்றும்
உண்டுபொருள் என்றபெரு முண்மை தோன்றும்
உலககுரு சிவானந்த ஒளியிற் றனே,

*"சிவானந்ததாசன்"*

# இந்து சமயக் கல்லூரி.

*[வித்துவான் ஆறுமுக நாவலர்]*

நமது இந்து மதத்தில் சைவம் வைணவம் காணாபத்தியம் கௌமாரம் சௌரம் சாக்தேயம் முதலிய அறுவகைச் சமயங்கள் உட்பிரிவுகளாய் உள்ளன. இவ்வறுவகைச் சமயங்களும் சைவம் வைணவம் என்னும் இருபெரும் சமையங்களுள் அடங்குவனவே இச்சமயங்களைப்பற்றிய பூரண அறிவு மக்களிடையே உண்டாகத் தக்க வேலைகள் எதுவும் இதுகாறும் ஏற்படாதிருப்பது வியப்பினும் வியப்பே. பிறசமயத்தோர்கள் சமய ஞானத்தைப் பரப்புதலே தக்க பணியெனக்கொண்டு தலை சிறந்த செயல்கள் நடைமுறையில் கொண்டுவந்து பணியாற்றி வருகின்றனர், சமயப் போதகர்கள் பலரைத் தெரிந்தெடுத்து அவர்களுக்குப் பல ஆண்டுகள் சமய அறிவு கொடுக்கின்றனர். பிறகு அவர்களைப் பல ஊர்களிலுள்ள தங்கள் நிலையங்களுக்கு அனுப்பிப் பிரசாரம் செய்கின்றனர், அவர்களால் நிறுவப்படும் பாடசாலைகளில் ஓர் சமய போதகரை வைத்து சமய ஞானம் ஊட்டுகின்றனர். அவர்களது அருந்திறத்தால் அங்கு கல்விபயிலும் இந்துமாணவர்களும் அம்மதத்தை விரும்பித் தமது மதத்தைவிட்டு அவர்கள் மதத்தில் சேர ஆர்வங்கொள்ளுகின்றனர், பாடசாலையேயன்றி அவர்கள் நிறுவும் ஆஸ்பத்திரிகள் தொழிற்சாலைகள் அனாதை இல்லங்கள் மாணவர் விடுதிகள் இவைகளிலெல்லாம் சமயபோதகர்கள் தனியிடம் பெற்று சமயப்பிரசாரம் செய்து நமது இந்து மக்களை நாள்தோறும் ஆயிரக்கணக்காக அவர்கள் மதத்தில் சேர்த்து வருகிறார்கள், அவர்கள் மதம் வளர்வதற்கு சமயக்கல்லூரிகளும் அதில் பயிற்றுவிக்கும் சமய ஞானமுமே தலைசிறந்த கருவிகளாக விளங்குகின்றன, அதனால் சமயக் கல்லூரிகள் பலவற்றைப் பல இடங்களில் நிறுவி அதனை நடத்தி வெற்றிகண்டு விளங்குகிறார்கள்.

நமது இந்து மதத்தில் இத்தகைய சமயக் கல்லூரிகள் எதுவும் இல்லை. அவ்வாறு சமயக்கல்லூரிகள் வைக்கவேண்டுமென்ற ஆர்வம்கூட எங்கும் எழுந்ததாய்க் காணப்படவில்லை. சமயக் கல்லூரி



கள் இல்லாததால் சமயத்துக்கு நேர்ந்திருக்கும் ஆபத்துக்களுக்கோ எல்லையில்லை.

ஒரு சிலர் பூஜா காரியங்களனைத்தும் வடமொழியிலேயே நடைபெறவேண்டுமெனவும், தேவாரம் ஓதுதல்கூட ஆசீர்வாதத்துக்குப் பிறகுதான் நடைபெறவேண்டுமெனவும் பிடிவாதம் பேசுகின்றனர். வேறு சிலர் கோயில்களில் வடமொழியே கூடாதென்றும் எல்லாம் தமிழிலேயே நடைபெற வேண்டுமெனவும் அதற்குத் தமிழிலுள்ள எந்தப் பாடலையாவது எப்படியாவது பாடினால் போதும் என்றும் பறைசாற்றுகின்றனர். கோவில்களின் பயன் இறைவனை ஒழுங்கானமுறையில்பூசித்து அவனது திருவருளைப்பெற்றுக்கொள்தலே ஆகும் என்பதை இவர்கள் அறவே மறந்து மொழிச் சண்டைகளுக்கு முற்படுகின்றனரே யன்றி, ஆண்டவனைப் பற்றியோ அவனது அருளைப்பற்றியோ அவ்வருளை அடையவேண்டிய முறையைப்பற்றியோ இவர்களுக்கு ஒரு சிறிதும் பொறுப்பு இருப்பதாகப் புலப்படவில்லை. இதற்கு வடமொழியிலும் தமிழ் மொழியிலும் தேர்ச்சியுடைய சமய அறிவுபெற்ற ஒரு சமய அறிஞர் குழுவை நிறுவி, அதில் சிந்திக்க வேண்டுவனவற்றைச் சிந்தித்துத் தக்க ஒரே முடிவிற்கு வந்து அம் முடிவினைக் கைக்கொண்டு, கோயில்களிலெல்லாம் ஒரே மாதிரியாய் பூஜை ஆகம விதிப்படி நடைபெறச் செய்யவேண்டுவது மேன்மக்களின் கடமையாகும், பூஜா விதிகளைக் காரண காரியத்தோடு தமிழ் மொழியில் விளக்கி மந்திரங்கள் முதலியவற்றை எம்மொழியில் எவ்வாறு நடைபெறவேண்டும் எனவும் விளக்கும் நூல் ஒன்று விரைவில் வெளிவரவேண்டும், இந்நூலில் வேதாகமங்கள் பத்ததிகள் முதலியவற்றால் விளக்கப்படும் கிரியாபாகங்கள் எல்லோரும் எளிதில் உணர்ந்து கொள்ளுமாறு எழுதப்படவேண்டும், இந்நூலைச் சமயக் கல்லூரியில் வேதாகமப் பகுதிக்குப் பாடப்புத்தகமாக வைத்து அதில் பூரண அறிவு பெறுகிறவர்களையே கோயில் அர்ச்சகர்களாக நியமிக்கவேண்டும்.

நமது சமய சாஸ்திர அறிவு அருகியதால் நமது சமயத்தைப் பற்றிய எவ்வித ஞானமும் இன்றி பொதுமக்கள் இருப்பது வருந்துதற்குரியதே. சாத்திர ஞானம் இல்லாததால் சமயத்தைப் பழிக்கின்றனர் சிலர், ஒன்றும் தெரியாது விழிக்கின்றனர் சிலர், தமக்குத்

தெரியாத கொள்கைகள் இம்மதத்தில் இருக்கின்றன, ஆதலால் இச்சமயமே தமக்கு வேண்டாமென வெறுத்து நாஸ்திகராகின்றனர் சிலர்; பிறமதம் போகின்றனர் பலர். தற்போது தேவஸ்தானத்தார் சமயச் சொற்பொழிவுகள் ஆற்றுவதற்கெனக் கோயில் நிதியில் ஒரு பகுதியை ஒதுக்கி வைக்கின்றனர், இச்செயல் பாராட்டற்குரியதே. ஆனால் சமயச் சொற்பொழிவாற்றுகிறவர்களுக்கு சமயஞானம் கொடுக்கத்தக்க கல்லூரிகளோ வேறு நிலையங்களோ எதுவும் இல்லாததால் சமய உயரிய தத்துவங்களுக்கு மாறுபாடாகத் தங்கள் மனம் போனவாறு வாயில் வந்தபடி சொற்பொழிவாளர்கள் சொற்பொழிவுகள் செய்து கேட்போர் உள்ளம் அதுவோ இதுவோ என ஐயங்கொள்ளுமாறு செய்துவிடுகின்றனர். ஆதலின் வேதாகம பாடம் போன்று சமய சாத்திர ஞானமும் பெறத்தக்க கல்லூரிகள் அவசியமே.

தேவாரம் முதலிய அருட் பாசுரங்களை அவற்றிற்கியைந்த பண்முறைகளைவிட்டு தங்கள் மனம் போனவாறு சினிமா முதலியவைகளில் பாடும் நவீன வர்ணமெட்டுகளை உபயோகித்துத் திருமுறைகளின் பெருமைகளைச்சிதைக்கின்றனர் அதனை ஓதுகின்றவர். அவர்கள் பாடும் பாட்டு யாரால் எங்கே பாடப்பட்டது என்று கேட்டால் கூடத் தெரியாதவர்களாயிருக்கிறார்கள். பாட்டிலடங்கிய பொதுக் கருத்துக்கூடத் தெரியாது சந்திபிரிக்கவோ பொருள் விளங்கும்படி வார்த்தைகளை இணைத்தோ பாடல்களைப் பாடத்தெரியாது குருட்டுப்பாடமாகப் பாடிவருகின்றனர், வேறு சிலர். இவர்களுக்கும் சமயக்கல்லூரிகளில் தக்க பயிற்சி கொடுக்கவேண்டும்,

ஆகவே சமயக் கல்லூரியில் வேதாகமப் பகுதி, சாத்திரப்பகுதி, தோத்திரப்பகுதி என மூன்று பகுதிகள் அமைக்கவேண்டும், இப்பகுதிகளுக்குத் தக்க ஒவ்வொரு ஆசிரியர்களையும் நியமிக்கவேண்டும். வேதாகமப் பகுதிகளில் பூரணதேர்ச்சியும் சாத்திர தோத்திரப் பகுதிகளில் ஏகதேச அறிவும் பெறுகின்றவர்களை அர்ச்சகர்களாக நியமிக்கவேண்டும். சாஸ்திர ஞானத்தில் பூரணத் தேர்வும் வேதாகமப் பகுதியிலும் தோத்திரப்பகுதியிலும் ஏகதேச அறிவும் பெறுகிறவர்களை சமய போதகர்களாகத் தேர்ந்தெடுக்கவேண்டும். தோத்திரப் பகுதியில் பூரண அறிவும் வேதாகமப் பகுதியிலும் சாஸ



# கௌடர்களும் திராவிடர்களும்.

விந்தியமலைக்கு வடக்கே இருப்பது கௌட தேசம். தெற்கே இருப்பது திராவிட தேசம். கௌடர்களில் ஐந்துபிரிவுகளுண்டு. பஞ்ச கௌடர்களென்பார்கள். அப்படியே பஞ்ச திராவிடர்களுமுண்டு. தெற்கேயிருந்து காசிக்குப் போயிருப்பவர்களுக்கு, அங்கே திராவிடப் பிராமணர்கள் என்று பெயர். தமிழ்த் தேசத்தில் தெலுங்கர்கள் இருப்பதுபோல மஹாராஷ்டிர தேசத்தில் தமிழர்களும் தெலுங்கர்களும் இருக்கிறார்கள். அங்கே ஒவ்வொருவருக்கும் கேல்கர், திலகர், ஸவர்க்கார் என்பவைபோன்ற வம்சப் பெயர்கள் உண்டு. தெலுங்கு தேசத்திலிருந்து பழைய காலத்திற் போனவர்களுக்கு டிலாங்கென்னும் வம்சப் பெயர் இருக்கிறது. அவர்களுக்கு இப்போது தெலுங்கு தெரியாது, தமிழ்த் தேசத்திலிருந்து போனவர்களுக்குத் திராவீட் (**Dravid**) என்ற வம்சப்பெயர் இருக்கிறது.

இப்பொழுது எழுதப்படும் சரித்திரங்களில், ஆரியர்கள் திராவிடர்கள் என்று பிரிக்கிறார்கள். அதனால் வழக்கு உண்டாகிறது. கௌடர்கள், திராவிடர்கள் என்பதுதான் புராதன விபாகம். பஞ்ச கௌடர்கள்; ஸாரஸ்வதர்கள், கான்யகுப்ஜர்கள், கௌடர்கள்,

---

*முற்பக்கத்தொடர்ச்சி.*

திரப்பகுதியிலும் ஏகதேச அறிவும் பெறுகிறவர்களைத் திருமுறை ஓதுபவர்களாக நியமனம் செய்யவேண்டும். கோவில் ஆணையாளர்களாகவோ அதிகாரிகளாகவோ நியமனம் செய்யவேண்டுமானால் அவர்களுக்கு வேண்டிய பரீட்சைத் தகுதிகளோடு வேதாகமப்பகுதி, சாத்திரப்பகுதி தோத்திரப்பகுதி இவற்றில் ஏகதேச அறிவாவது இருக்கவேண்டுமென முடிவு செய்யவேண்டும். இவற்றிற்கெல்லாம் நமது தமிழகம் முழுமைக்குமாக ஓர் சமையக்கல்லூரியை உடனே நிறுவுதல் மிகமிக இன்றியமையாத செயலாகும், இச்செயலில் தேவஸ்தான இலாகாவும் மடாலய மஹாஸந்நிதானங்களுடன் தேவஸ்தான பிற அறநிலையப் பொறுப்பாளிகளும் முன்வந்து முயன்று வெற்றிகாண விரும்புகின்றோம்,

உத்கலர்கள், மைதிலர்கள் என்பவர்களாம். ஸாரஸ்வதர்கள் காஷ்மீர தேசத்தில் இருக்கிறார்கள்; கான்யகுப்ஜர்கள் பஞ்சாப் தேசத்தில் இருக்கிறார்கள்; உத்கலர்கள் ஒறிசா தேசத்தில் இருக்கிறார்கள்; மைதிலர்கள் நேபாளம், பிஹார் முதலியஇடங்களில்இருக்கிறார்கள்,

பஞ்சகௌடர்களிற் பிரதானமானவர்கள் கௌடர்கள். அதுபோல பஞ்சதிராவிடர்களுள் திராவிடர்கள் பிரதானமானவர்கள். இவ்விருவர்களும் இந்தக் காலத்தில் அதிகமாகக் குமாஸ்தாக்களாக இருக்கின்றார்கள். இரண்டு வகையாருக்கும் ஆங்கில மொழி அபிவிருத்தி சீக்கிரம் உண்டாகின்றது. மைதிலர்களில் மிச்ரா என்னும் பட்டம் உடையவர்கள் அதிகம். மைதில தேசத்தில் தர்பங்கா **(Durbanga)** ஜனக்பூர், என்ற இரண்டு ஊர்கள் இருக்கின்றன தர்பங்கா என்பது தநுர்பங்கம் என்பதிலிருந்து வந்தது. இராமர் தநுர்பங்கம் செய்த இடம் அது ஜனக்பூர் என்பது ஜனகன் பெயரால் ஏற்பட்டது. ஜனகன் இருந்தது மிதிலாபுரி. அந்தத் தேசம் இப்பொழுது மைதிலா என்று வழங்குவது, அந்த நகரத்தின் பெயரைக் கொண்டுதான். பஞ்ச திராவிடர்கள் ஆந்திரர், கர்நாடகர், மஹாராஷ்டிரர், கூர்ஜரர், திராவிடர் என்பவர்களாம்,

[காஞ்சி காமகோடி பீடாதிபதி ஸ்ரீ சந்திரசேகரேந்திர சுவாமிகள் 30-10-1932 இல் ஆதி சங்கரரின் குருவின் ஆசாரியரான கௌடபாதரின் வரலாறு பற்றிச் செய்த பிரசங்கத்திலிருந்து எடுக்கப்பட்டது.]

## சிவானந்தர் வணக்கம்.

4. இறைவன் என்னும் பொருளொன்றே
இலையென் றேவீண் வாதமிடும்
முரடர் தாமும் தலைவணங்கி
முற்றும் உண்மை யெனப்போற்ற,
கருணை, அன்பு, பேரமைதி,
கனிந்த சாந்த முறுவலுடன்
தரிச னத்தேன் முகங்காட்டும்
சற்குரு மணியே நீவாழ்க!

''பரமஹம்ஸதாசன்''

## பாடிடுவோம் அருள்நெறியை!

*[-: கவிஞர் கா. சீ. திருவாழ்மார்பன் :-]*

கல்லென்று கடவுளரைச் சொன்னபுகலற்றவரின்
பொல்லாத புத்தியினைப் போக்கிடவே வந்ததெது?
நல்லோர்கள் சொன்னதுதான் நான்மறையும் தந்ததுதான்
நல்லஅந்த அருள்நெறியை நாளும்நன்கு பாடிடுவாய்!

எரிந்திடவே இலக்கியத்தை வேண்டுமென்று சொன்னவரை
சிரித்துஉளம் நல்லதையே நினைத்திடவே செய்ததெது?
பெரியோர்கள் போற்றியது பெம்மனருள் பெற்றஅந்த
அருள்நெறியை அன்புடனே அனுதினமும் பாடிடுவாய்!

நீண்டாதான் என்றசொல்லை தீயிலிட்டு மாய்த்ததெது?
வேண்டாநான் எனும்சொல்லை வெந்தழலி லிட்டதெது?
மாண்புடைய முன்னோர்கள் மகிமையுடன் தந்தநல்ல
பண்புடைய அருள்நெறிதான் பலமுறையும் பாடிடுவாய்!

நாத்திகமே பேசிக்கெட்ட நாத்தழும்பு ஏறியோரை
ஆத்திகத்தின் அடிச்சுவட்டில் அன்புகொள்ளச் செய்ததெது?
சாத்திரங்கள் போற்றுவது சற்குணர்கள் ஏற்றுவது
நேர்த்திமிக்க அருள்நெறியே நித்தம்நித்தம் பாடிடுவாய்!

அன்புடைய *அடிகளாரை அறிஞரேறு பல்லோரை
இன்பமிகு வழிகாட்டி என்றுசொல்லித் தந்ததெது?
மன்பதையை நீக்கியவர் மகிழ்வதையே ஆக்கியவர்
சொன்னஅந்த அருள்நெறிதான் சுருதிகூட்டிப் பாடிடுவாய்!

நாடிடுவாய் அருள்நெறியை நாளும்நலம் பெற்றிடவே
கூடிடுவாய் அருள்நெறியைக் குமரனருள் பெற்றிடவே
ஆடிடுவாய் அருள்நெறியில் அத்தனருள் பெற்றிடவே
பாடிடுவாய் அருள்நெறியைப் பண்புடனே வாழ்ந்திடவே!

*குன்றக்குடி அடிகளாரை.

# பகுத்தறிவு வினாக்களும் பக்தி ஞான விடைகளும்.

1, வினா: கடவுள் என்ற வார்த்தை தோன்றி எவ்வளவுநாள் இருக்கும் ?

விடை: மனிதன் என்று அறிவுக் கண்கொண்டு உலகத்தைப் பார்த்து அவற்றின் அமைப்பிலே இருக்கும் அற்புத ஆற்றலை உணர்ந்தானோ அன்று கடவுள் என்ற சொல் தோன்றிற்று.

2 வினா: 'கடவுள் என்றால் என்ன'? என்று எப்படிப்பட்ட ஆஸ்திகனும் சொல்ல முடிவதில்லை ஏன் ?

விடை: பதில் சொல்ல முடிவதில்லை என்று உங்களுக்குச் சொன்னவர் யார் ? நூற்றுக்கணக்கான மொழிகளில், ஆயிரக்கணக்கான பெரியோர்களால் விளக்கப்பெற்றுக், கோடிக்கணக்கான மக்களால் ஏற்றுக்கொள்ளப் பட்டிருக்கின்றதே ! உதாரணமாக:

*வானாகி மண்ணாகி வளியாகி ஒளியாகி*
*ஊனாகி உயிராகி உண்மையுமாய் இன்மையுமாய்க்*
*கோனாகி யானெனதென் றவரவரைக் கூத்தாட்டு*
*வானாகி நின்றானை என்சொல்லி வாழ்த்துவனே,*

என்ற திருவாசகத்தை எடுத்துக்கொள்க.

3, வினா: ஒவ்வொரு ஆஸ்திகனும் தனக்குப் புரியாத ஒன்றையே—தன்னால் தெரிந்து கொள்ள முடியாததும் பிறருக்கு விளக்கமுடியாத ஒன்றையே—குரங்குப்பிடியாய்ப் பிடித்துக்கொண்டு கடவுள். கடவுள் என்று கட்டி அழுகிறதும் எந்தக் காரணம்பற்றி ?





# ஸ்ரீ கேதார் பத்திரி யாத்திரை,

நாங்கள் யாத்திரைசெல்லும் மார்க்கத்தில் இரண்டு மூன்று மைல்களுக்கிடையில் கிராமங்கள் உண்டு. அங்கே ஒவ்வொரு கடைவீதி உண்டு. யாத்திரீகர்கள் தங்குதற்கேற்ற இடங்களைக் கடைக்காரர்களே கட்டிவைத்துள்ளார்கள். இப்படிப்பட்ட இடங்கள் சட்டி என்ற பேரால் அழைக்கப்பெறும். இந்த இடங்களில் யாத்திரீகர் தங்குவதற்கு அவர்கள் பணம்பெறுவதில்லை. தங்குபவர்கள் செய்யவேண்டியது, தமக்குச் சாப்பாட்டுக்கு வேண்டிய பொருட்களை அவர்களிடம் விலைக்கு வாங்கிக்கொள்ளவேண்டியது மாத்திரமே. சமையலுக்குரிய பாத்திரங்கள் எல்லாம் கொடுத்து உதவுவார்கள். கோதுமைமா, அரிசி, பருப்பு, உருளைக்கிழங்கு, உப்பு, மசாலைவகை, பால், நெய், விறகு இவையே அவர்களிடமுள்ள பொருட்கள்.

எங்களுக்குத் தேவையான பொருட்களை வாங்கி அவர்களிடமே கொடுத்தாலும் அவர்கள் பாகம்பண்ணித் தருவார்கள். ஆனால் பாத்திரங்கள் எல்லாம் நாங்களேதான் துப்பரவுசெய்து கொடுக்கவேண்டும். இத்த ஏற்பாட்டின்படிதான் சமைத்துத்தரச் சம்மதிப்

முற்பக்கத்தொடர்ச்சி.

விடை, தன்னால் தெரிந்து கொள்ள முடியாதது, பிறருக்கு விளக்கமுடியாதது என்று சொன்னது யார் ? எத்தனையோ எளிமையான முறைகளில் கூட எடுத்துச் சொல்லியும் புரிந்துகொள்ள மறுப்பதுடன் அமையாது, கடவுள் நம்பிக்கையுடைய மிகமிகப் பெரும்பான்மையோரைத் திட்டுவதால் யாருக்காவது நன்மையுண்டா ?

*[பெரியார் (ஈ. வே. ரா.) 'விடுதலை'யில் கேட்டிருந்த பகுத்தறிவுக் கேள்விகளுட் சிலவும், அவற்றிற்கு குன்றக்குடி அடிகளார் அனுப்பிய விடைகளும் மேலே தந்துள்ளோம். இவ்விடைகள் அப்பத்திரிகையில் பிரசுரிக்கப் படவுமில்லை; திருப்பிக் கேட்கப்பட்ட வினாக்களுக்கு விடை வரவுமில்லை. இன்னும் வரும்.]*

பார்கள். வடநாட்டில் உள்ளவர்களுக்கு சோறு ஆக்கிப் பழக்கமேகிடையாது, ஆதலால் அவர்களை ஆக்கவிட்டால் எங்களூர்ச் சோறுபோல இருக்காது, அரை அவியலாக இருக்கும். அல்லது கஞ்சிபோல இருக்கும், கூடியளவு நாமே சமைத்துக்கொண்டால் ருசியாகவும் சுத்தமாகவும் இருக்கும்,

அவர்கள் றொட்டி சுடுவதைப் பார்த்தீர்களானால் வேடிக்கையாக இருக்கும், சட்டியில் வெந்த றொட்டியைத் தூக்கி நெருப்பிலே போடுவார்கள். பின்னர் சாம்பலை ஊதிவிட்டுச் சாப்பிடுவார்கள், இரண்டு அணா பெறுமதியான பால் சில இடங்களில் ஒரு ரூபா விலையாகும், அத்தகைய இடங்களில் புட்டிப்பால் உதவியாக இருக்கும், சீனிபோடாத பால் இரண்டு அணாவாக இருக்கும்போது சீனிபோட்ட பால் மூன்று அணாவாக இருக்கும். ஆதலால் சீனிப்பிரியர்கள் இரண்டு மூன்று றுத்தல் சீனி கொண்டுசெல்லுதல் நல்லது,

எங்கள் பொருட்களையும் கொண்டு நாங்கள் மலையில் ஏறுவதென்றால் மிகச் சிரமமாக இருக்கும். சில இடங்களில் எங்கள் உடம்பே எங்களுக்குப் பாரமாகத் தோற்றலாம். நெடுந்தூரம் நடந்து அறியாதவர்கள் மலையில் ஏறிப் பழக்கமில்லாதவர்கள் நமது பொருட்களைக் கொண்டுசெல்வதற்கு மலைப்பிரதேசத்துக் கூலியாட்களை அமர்த்திக்கொள்வது நல்லது, இவர்கள் நேபாள தேசத்தவர்கள். நல்ல நம்பிக்கையானவர்கள். ஹரித்துவார் தொடக்கம் நாங்கள் யாத்திரை செல்லும் எந்த இடங்களிலும் நூற்றுக் கணக்கானவர்களைக் கூட்டம் கூட்டமாகக் காணலாம், சிலர் தமக்கு வேண்டிய கூலிகளைக் ஹரித்துவாரிலேயே அமர்த்திக்கொள்வதுண்டு. மோட்டாரைவிட்டிறங்கி எந்த இடத்திலிருந்து நடையாத்திரை ஆரம்பமாகிறதோ அந்த இடத்திலிருந்தே கூலிகளை அமர்த்திக்கொள்ளலாம். அதனால் லாபமுண்டு.

அவர்கள் சாப்பாடு இல்லாமலே சம்பளம் பேசிக்கொள்வார்கள், காரணம் இரண்டு உண்டு. ஒன்று நாங்கள் சோற்றுப் பிரியர்கள், அவர்கள் ரொட்டிப் பிரியர்கள், அடுத்தது யாத்திரீகர்கள் எப்படியும் தம்முடன் வந்த கூலிக்குச் சாப்பாடு கொடுக்காமல் சாப்பிடமாட்டார்கள் என்பது அவர்களுக்கு நன்கு தெரியும், ஆதலால்



அவர்கள் சாப்பாடு தங்கள் கணக்கு என்றே சம்பளத்தைப் பேசுவதுண்டு, பனி உறைந்த மலைகளிலே உடம்பே பாரம் என்று நாம் நினைக்கத்தக்க இடங்களிலே அந்தப் பொருட்களைச் சுமப்பதோடு எங்களுக்கும் உற்சாகமூட்டி அவர்கள் அழைத்துச் செல்வதை நினைக்கும்போது அவர்களுக்கு எவ்வளவு சம்பளம் கொடுத்தாலும் தகும் எனவே தோன்றும்.

யாத்திரீகர்கள் சாதாரணமாய்ப் பண்டாக்கள் உதவியைக் கொண்டு யாத்திரையை நடத்துவது வழக்கம், வட இந்தியாவில் பிராமணர் பண்டா என்ற பெயரால் வழங்கப்படுகின்றனர், ஒரு நல்ல வழிகாட்டி இருந்தால் எமது சிரமத்தில் பாதி குறைந்துவிடும். பண்டாக்களிடம் அகப்பட்டுவிட்டால் அவர்கள் யாத்திரீகர்களிடமிருந்து எவ்வளவு பணம் கூடுதலாகப் பெறமுடியுமோ அதிலேதான் குறியாக இருப்பர்.

கேதார் பத்திரி செல்பவர்கள் 175 மைல் வரை நடந்துதான் செல்லவேண்டும். இந்தக் காலத்தில் நடை என்றால் பயந்து விடுகிறார்கள், நடந்து செல்லும் யாத்திரையில்தான் இன்பம் உண்டு. அந்தக்காலத்தில் நடந்து செல்வதையே யாத்திரையென்று அழைத்தார்கள், கதிர்காம யாத்திரை செல்பவர்கள் திசையிலிருந்து கதிர்காமம் வரையிலுள்ள 11 மைலையும் நடந்து செல்லும்போதுதான் யாத்திரையின் உண்மையான பலனை அனுபவிக்கின்றனர், மூவாயிரம் மைலுக்கு மேற்பட்ட எங்கள் யாத்திரையில் ஆனந்தத்தைக் கொடுத்தது நடந்துசென்ற அவ்வளவு தூரமுந்தான், நடையாத்திரையில் உள்ள ஆனந்தத்தை நடந்துபார்த்தால் அனுபவிக்கலாமேதவிர சொல்லால் விளக்கமுடியாது.

கேதார்பத்திரிசென்று தரிசனை செய்யத்தான்வேண்டும். ஆனால் நடக்கவே மாட்டேன் என்று யாராவது விரும்பினால் அவர்களுக்கும் வழியுண்டு, அவர்கள் குதிரைமேற் செல்லலாம், இக்குதிரைச் சவாரிக்கு முன்பழக்கம் தேவையில்லை, அதிவேகமாகப் போகுமென்று அஞ்சவும் வேண்டாம், மாதம் காதவழி செல்லும் விகடராமன் குதிரையைப்பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறீர்கள்தானே, அதேபோல்தான் இவையும், இவற்றை எவ்வளவு துரிதப்படுத்தினா

லும் மணிக்கு மூன்று அல்லது நான்கு மைல்களுக்குமேல் போகா, மைலுக்கு ஒரு ரூபா தொடக்கம் ஒன்றரை ரூபாவரை கூலியாகும். நாங்கள் செல்லும் வழிகளில் எங்கும் குதிரைகள் சாதாரணமாகக் கிடைக்கும். சிலர் ஏற்றமான பாதைகளுக்கு மாத்திரம் குதிரையில் சென்று இறக்கமான பாதையில் நடந்து செல்வார்கள்.

குதிரைமீது ஏறமுடியாதவர்கள் கனம் குறைந்தவர்களானால் கண்டிவைத்துக்கொள்ளலாம். கண்டி என்பது ஒரு கூடை. அதை ஒருவன் முதுகில் சுமந்து செல்வான், பிரம்பு நாற்காலியில் உட்கார்ந்துகொள்வதுபோல், அதில் உட்கார்ந்துகொள்ளலாம். கனம் அதிகமாய் இருப்பவர்கள் தண்டிவைத்துக்கொள்ளவேண்டும். அதுவும் ஒரு சாய்வு நாற்காலிபோலவே இருக்கும். அதை நான்குபேர் தூக்கிக்கொண்டு போவார்கள், அதிகத்தூரம் போகவேண்டுமென்றால் மத்தியில் மாற்றிக்கொள்வதற்கு இன்னும் இரண்டுபேர் வேண்டும் ஆசாமி கனமாயிருந்தால் எட்டுப்பேர்களும் வேண்டியிருக்கும், தண்டிவைப்பது எல்லாவற்றிலும் செலவு அதிகம், அதற்கடுத்தபடி கண்டியும் குதிரையும். சாமான்களைக் குதிரை அல்லது ஆள்மூலந்தான் கொண்டு போகவேண்டும்.

வழிநெடுகிலும் ஆடு, மாடு, குதிரை எல்லாமே மனிதனோடு போட்டிபோட்டுச் சாமான்கள் சுமந்து செல்வதைக் காணலாம். நூற்றுக்கணக்கான ஆடுகள் கூட்டங் கூட்டமாக வரும், எல்லாம் கம்பளி ஆடுகள். உருவத்தில் பெரியனவும் கொம்புகள் நீண்டவையுமான நான்கு ஐந்து ஆடுகள் முதலில் வரும், அவற்றை குடும்பத்தில் மூத்தமகன் ஓட்டி வருவான். அவைகளுக்குப் பின்னே மற்றைய ஆடுகள் வரிசையாக வந்துகொண்டிருக்கும். அவற்றின் பின்னே குடும்பத்தலைவனும் மனைவியும் மற்றையோரும் வருவார்கள். ஆடுகள் ஒவ்வொன்றும் இருபக்கங்களிலும் மூட்டைகளைத் தொங்கவிட்டுக்கொண்டே செல்லும். குடும்பத்திலுள்ள எல்லாருமே கூடைகளில் சாமான்களைச் சுமந்துகொண்டு செல்வர், கைக்குழந்தைகளையும் கூடைகளுக்குள்ளே வளர்த்தித் தூக்கிச்செல்வர். ஆடுகளுக்குப் புல்தேவையான இடத்தில் கூடாரமடித்துப் பெண்கள் சமையலைத் தொடங்குவர். ஆண்கள் ஆடுகளைமேய்க்கச் செல்வர்.

(தொடரும்)



# அப்பூதியடிகள் மனைவியார்.

*(ஆ. சிவலிங்கனார்)*

வீரம் என்ற சொல்லைக் கேட்டவுடன் போர் நினைப்பு வரும், போரில் எதிரியை வெல்வதற்குத் துணைபுரியும் உள்ளத்துணர்ச்சியே வீரம் எனப்படும். போர் வீரம் மட்டும் வீரம் எனப்படாது, அது எதிரியாகிய மனிதனை—அவனைச் சார்ந்த விலங்குகளை வெல்லப் பயன்படும். வாழ்க்கையில் குறுக்கிடும் எதிரிகளை வெல்லப் பயன்படாது. அவ்வகையில் பயன்படும் உள்ளத்துணர்ச்சியும் வீரம் எனவேபடும், இவ்விரண்டிலும் பின்னதே மிகச் சிறந்தது. வாழ்க்கைப் பாதையில் குறுக்கிடும் எதிரிகள் ஐம்பொறிகளாலும் தோன்றுபவர்கள். அவர்களையும் பொதுவாக ஆசையென்ற ஒரு பெயரில் அடக்கிவிடலாம், ஒருவனுக்கு அவன் மனப் பேராசையே பேர் எதிரியாம். அவ்வாசையை எவன் வெல்கிறானோ அவனே சிறந்த வீரன்.

மனப் பேராசையை அடக்குபவர்கள் அடியவர்கள். அவர்களே வீரர்கள்; அவர்களே வெற்றியாளர்கள்.

*கேடு மாக்கமும் கெட்ட திருவினார்*
*ஓடும் செம்பொன்னும் ஒக்கவே நோக்குவார்*
*கூடும் அன்பினில் கும்பிடலே யன்றி*
*வீடும் வேண்டா விறலின் விளங்குவார்.*

என்று அடியார்களைப்பற்றிக் கூறினார் சேக்கிழார். சிவபிரானை அன்புடன் கும்பிடுமளவில் இருந்தனரே யன்றித். தமக்கு வீடு வேண்டும் என்ற விருப்பமும் கொள்ளவில்லையாம் அவர்கள். வீடுவேண்டியே யாவரும் பாடுபடுவர். ஆனால் அவ்வீட்டிலும் ஆசைவைத்திலர் என்றால் ஆசையை எவ்வளவில் வென்றிருக்கிறார்களென்று ஓர்மின். அதனால்தான்—வீடும்வேண்டாமையால்தான்—"விறலின் விளங்கினார்" என்றார் சேக்கிழார். அவ்விறலுடையவர்களின் "வீரம் என்னால் விளம்பும் தகையதோ" என்று பின்னரும் கூறினார்,

அடியவர்க்கு வீரம் உயிர்க்கொலை வீரம் அன்று; ஆசைக்கொலை வீரம். முதற் 'கொலைவீரம்' மெய்ப்பாட்டுவகையில் வெளிப்புறப்படும். அதனையுடையவன் தன்மெய்யின் மூலம்புலப்படுத்திக்கொள்

ளலாம் பிறர்க்கும் புலப்படுத்தலாம். பின்னது புலப்படாது. செயல் முடிவிலேயே வீரம் என உணரும் தன்மையது. முதல் வீரனைக் காணும்போதே அறியலாம்; பின்னவனை அவ்வாறு அறியமுடியாது.

பெரிய புராணத்துட்கண்ட அடியவர் யாவரும் துறவிகள் அல்லர், சிலரே துறவியர். பலர் இல்லறத்தாரே.

*பற்றுக பற்றற்றான் பற்றினை யப்பற்றை*
*பற்றுக பற்று விடற்கு*

என்ற வள்ளுவர் வாக்குப்படி அடியவர் யாவரும் இறைவனை—இறைவனடியாரைப் பற்றினமையால் அவர்களை, உலகத்தோடியைந்திருந்து—இல்லற வாழ்வினை மேற்கொண்டிருந்தும், பற்று (ஆசை) விட்டகன்றது. அதனாலன்றோ மனைவியைக் கையைத் துணித்தவரும், மகனைக் கொன்றவரும் சுற்றத்தைக் கொன்றவரும் ஆன அடியார்களும் இறைவனருள் பெற்றார்கள். சிறுத்தொண்டர் மனைவியார் மகனைத் துறந்ததை அறிந்தோமன்றோ? மகன் மாட்டு வைத்த பற்று தானே நீங்கி வீரங்கொண்ட அம்மையார் நம் அப்பூதி அடிகளார் மனைவியார்.

சோழநாட்டுத் திங்களூரிலே அந்தணர் குலத்திலே அப்பூதி என்ற அடிகளார், களவு, பொய், காமம், கோபம் முதலிய குற்றங்களைக் காய்ந்தவராய், அவ்வாறே காய்ந்த தம் மனைவியாருடன் இல்லறமாம் நல்லறத்தை மேற் கொண்டிருந்தனர், அவர் திருநாவுக்கரசர். சிவபிரானால் சூலைநோய் கொடுத்தாளப்பட்டதும் அமணர்களால் தொல்லைப்பட்டுக் கடலில் கல்லே தெப்பமாகக் கொண்டு திருப்பாதிரிப் புலியூர்ப் பாங்கர்க் கரையேறியதும் பிறவும் ஆன அருட்செயல்களை வியந்தவராய் அவரைக் காணாதிருந்தும் அவர்பால் பேரன்பு பூண்டவரானார். "அளவைகள் நிறைகோல் மக்கள் ஆவொடு மேதி மற்றும் உள்ள"னவற்றிற்கும் "திருநாவுக்கரசு" என்ற பெயரிட்டு அழைப்பா ரானார், அப்பெயர் அவர்க்கொரு மந்திரமானது.

வேனிற்காலம். தம்மூர் வழி மருங்கு தண்ணீர்ப் பந்தல் அமைத்து அதற்குத் 'திருநாவுக்கரசர் தண்ணீர்ப்பந்தல்' எனப் பெயரிட்டுத் தருமம் செய்தனர். அது காலை திருநாவுக்கரசர், சோழநாட்டுத்



# உன் சமயமே மெய்யென்று சாற்றாதே!
## உலகின்
# ஏனைய சமயங்கள் பொய்யென்று தூற்றாதே.

*[ஸ்ரீ ராமகிருஷ்ணர் திருவாய்மொழி]*

கடவுளை சுவாநுபூதியில் அடைந்தாகவேண்டும், அவரை அடைதற்கு மார்க்கங்கள் பல இருக்கின்றன. கடவுளை அடைதற்கு சமயங்களும் பல இருக்கின்றன. ஒருசமயம் மேலானது என்றும், மற்றொரு சமயம் கீழானது என்றும் கருதலாகாது. கடவுளின் ஆணைப்படி சமயங்கள் பல உண்டாயிருக்கின்றன. ஆகையினால் அவையாவும் மெப்பொருளை அடைவதற்கான மார்க்கங்களேயாம். ஏதேனும் ஒருசமயத்தைத் தீவிரமாகக் கடைப்பிடித்துக் கடவுளை அடைந்தாகவேண்டும். கடவுளை அடைவதே குறிக்கோள் என்பதை மறந்துவிடலாகாது. மாடிக்குச்செல்ல ஒருவர் விரும்புகிறார், கீழ்த்தரையினின்று மாடிக்குப்போய்ச்சேர உபாயங்கள் பல இருக்கின்றன, கல்லால் கட்டிவைத்துள்ள படிக்கட்டு இருக்கிறது. செங்கல்லால் கட்டிவைக்கப்பட்டுள்ள படிகளும் இருக்கின்றன. மரத்தால்

---

*முற்பக்கத் தொடர்ச்சி.*

தலங்களை வணங்கி வந்தவர் திங்களூர் வந்து, தண்ணீர்ப் பந்தலில் தம் பெயர் இருப்பது கண்டு அங்கிருந்தாரை வினவி, அப்பூதியடிகளிடம் வந்து நம்பேர் எழுதாமல் தண்ணீர்ப் பந்தலுக்கு வேறொரு பேர் எழுதக் காரணம் ஏன் என வினவினார். அப்பூதியார் மிக்க சினம் கொண்டு "பொங்கு கடற் கல் மிதப்பில் போந்தேறும் அவர் பெருமை ,அங்கணர் தம் புவனத்துள் அறியாதார் ஆருளர்? மங்கலமாம் திருவேடத்துடன் இருந்தும் அறியாது கேட்ட நீர்தாம் யாவர்? எந்தவூரினர்?" என வினவினார். நாவுக்கரசரும் "பிறதுறையின் நின்றேதச் சூலையினால் ஆட்கொள்ளப்பட்ட சிறுமையேன் யான்" என்றார். உடனே அடிகளார் வணங்கித் தம்மனை மக்கள் சுற்றத்தையும் அழைத்து வந்து வணங்குவித்தார், நாவுக்கரசரும்நீறளித்து அருள் செய்து அவர்கள் வேண்டுகோட்படி அமுதுஉண்ண இசைந்திருந்தார்.

(தொடரும்)

செய்து வைத்துள்ள ஏணி இருக்கிறது. இவைகளில் ஏதேனும் ஒன்றைப் பயன் படுத்தி மாடிக்குப் போய்விடலாம். கிளைகள் நிறைந்துள்ள மூங்கிலொன்று கட்டிடத்துக்குப் பக்கத்தில் நாட்டி வைக்கப்பட்டிருக்கிறது, அந்த மூங்கில் மீது ஏறியும் மாடிக்குப் போய் விடலாம், மேலே இருந்து கட்டித் தொங்கிக் கொண்டிருக்கும் கயிறு ஒன்றைப் பிடித்து ஏறி மேலே போய்விடவும் முடியும். இவையாவும் மாடியை அடைதற்கு உற்ற உபாயங்களாகின்றன, அதே பாங்கில் கடவுளை அடைவதற்கும் பல மார்க்கங்கள் இருக்கின்றன,

சமயப்பற்றுடையவர்களில் சிலர் தங்கள் மதமேசிறந்தது என்றும், ஏனைய மதங்கள் அவ்வளவு சிறப்பு வாய்ந்தவைகள் அல்ல என்றும் கருதுகின்றனர். ஏனைய மதங்களில் குருட்டு நம்பிக்கைகள் பல புதைந்து கிடக்கின்றனவென்று அவர்கள் குறைகூறுகின்றனர். தப்பும் தவறுதலுமான கோட்பாடுகளும் பல ஏனைய மதங்களில் செறிந்து கிடக்கின்றனவென்று அவைகளைச் சிறுமைப் படுத்திப் பேசுகின்றனர், அப்படிச் செய்வது பொருந்தாது. குருட்டு நம்பிக்கைகளும் தப்பும் தவறுதல்களும் உண்மையிலேயே சிலமதங்களில் புகுந்திருக்கின்றனவென்று வைத்துக் கொள்வோம், ஆனால் கேடு ஒன்றும் வந்துவிடாது. மனிதன் எந்த மதத்தைப் பின்பற்றுகிறான் என்பது முக்கியமானதல்ல. கடவுளிடத்து எவ்வளவு ஆழ்ந்த பக்தி வைத்திருக்கிறான் என்பதே முக்கியமானது. எல்லார் உள்ளத்திலும் அந்தராத்மாவாகக் கடவுள் இருக்கிறார். யார் எந்த மதத்தைக் கடைப்பிடிக்கிறார் என்று கடவுள் பார்ப்பதில்லை. யாரிடத்து உண்மையான பக்தி இருக்கிறது என்பதையே அவர் கணக்கில் எடுத்துக்கொள்கிறார். மனிதனோ இந்த முக்கியமான கோட்பாட்டை மறந்து விடுகின்றான், மெய்யான சமயத்தைக் கையாளுவதால்தான் கடைப்பிடிக்கும் மார்க்கந்தான் மேலானது என்ற எண்ணம் அவனுடைய உள்ளத்தில் வந்து விடுகிறது. அத்தகைய எண்ணமும் ஒருவித ஆணவ அகங்காரமாகிறது. ஒவ்வொரு மனிதனும் ஒவ்வொரு கடிகாரத்தை வைத்திருக்கிறான், தன் கடிகாரம்தான் சரியாகக் காலத்தைக் காட்டுகிறது என்று எண்ணி அவன் செருக்குறுகின்றான்.



தந்தை ஒருவனுக்குப் புதல்வர்கள் சிலர் இருக்கின்றனர், புதல்வர்களுள் மூத்தவன் தந்தையை முறையாகக் கூவியழைக்கின்றான். பிதா என்றோ அப்பா என்றோ சொற் குற்றமில்லாது அவன் பேசுகின்றான். ஆனால் குழந்தைப் பருவத்திலிருக்கும் மைந்தனது நிலை வேறானது. மழலைச் சொல் சொல்லும் நிலைமையில் அவன் இருக்கின்றான், அப்பா என்பதற்குப் பதிலாக 'அப்' என்று அவன் அழைக்கின்றான். அத்தகைய குற்றத்தை முன்னிட்டு தந்தை சிறுவனைப் புறக்கணித்து விடுகின்றாரா? மைந்தனுடைய உள்ளத்தில் உள்ள அன்பு ஒன்றையே அவர் கணக்கில் எடுத்துக்கொள்கின்றார், உள்ளன்பு ஒன்றே அவரை மகிழ்விக்கும்,

கடவுளுக்கு நாம் எப்பெயரிட்டு அழைக்கிறோம் என்பது முக்கியமானதல்ல, மெய்ப்பொருளாக உள்ளவர் அவர் ஒருவரே. சமயங்கள் யாவும் அவருக்குப் பலப்பல பெயரிட்டு அழைக்கின்றன. எந்தப் பெயர் சிலாக்கியமானதென்று சமயவாதிகள்சண்டைபோட்டுக்கொள்கின்றனர். உண்மையான பக்தர்கள் அங்ஙனம் சண்டையிடமாட்டார்கள், மக்கள் தமக்கு எப்பெயரிட்டு அழைக்கிறார்கள் என்பதைக் கடவுள் பொருள்படுத்துவதில்லை. தம்மிடத்து அவர்கள் எத்தகைய இணக்கம் வைத்துள்ளார்கள் என்பதையே அவர் பொருள் படுத்துகிறார்.

## சிவானந்தர் வணக்கம்.

5. உயர்ந்த லட்சிய ஒளிகாட்டி
ஓங்கும் இமயத் துச்சியிலே,
இயைந்து கலந்து அன்புவடி
வேந்தி விலங்கு மனப்போரால்
அயர்ந்து கிடக்கும் உயிர்க்குலத்தை
அணைத்(து)ஆன் மப்பால் அமுதூட்ட,
நயந்து தெளிந்து வரும்புனித
ஞான கங்கா வாழியநீ!

"பரமஹம்ஸதாசன்"

# பக்தி நிலையில் பாரதியார்.

*[ரா. வரதநாராயணன்]*

தோத்திரப்பாடல் பகுதியில் பக்தியால் அடையும் பல நன்மைகளை வெளியிட்டுப் பாடியிருக்கும் பாடல் பக்தியின் சீர்மையைக் கண்டபடி கூறும் தன்மைவாய்ந்ததாகும். அவர் பாடுகிறார். "பக்தியினாலே-தெய்வபக்தியினாலே பாரினில் எய்திடும் நன்மைகள் கேளடீ!" என்று தொடங்கி பல நன்மைகளை இந்த பக்தியினால் எய்தலாகும் எனக் கூறிவிட்டு முக்யமாக.

"ஆசையைக் கொல்லுவோம்—புலை
யச்சத்தைக் கொன்றுபொசுக்கிடுவோம் கெட்ட
பாச மறுப்போம்—இங்கு
பார்வதி சக்தி விளங்குதல் கண்டதை
மோசஞ் செய்யாமல்—உண்மை
முற்றிலும் கண்டு வணங்கி வணங்கியோர்
ஈசனைப் போற்றி—இன்பம்
யாவையுமுண்டு புகழ்கொண்டு வாழ்குவம்" என்கிறார்.

மேற்சொன்ன செயற்கரிய செயல்களைச் சாதிக்கும் வல்லமைஉடையது பக்திதான் என்று பல்லவி போட்டுப் பாடுகிறார்,

ஒரு தனி மனிதன் பக்திக்கும், சிறந்த கவிஞர்களின் பக்திக்கும் வேறுபாடு எத்தனையோ உண்டு. தனிமனிதன் மற்றவைகளைப் பற்றிக் கவலைப்படாது தன் மட்டுக்கும் வாழ்ந்துவிடலாம். இது இயல்பே. ஆனால் மாந்தரில் மாணிக்கமான கவிஞன் முன்னால், அப்படித் தனித்து வாழ்ந்தது கிடையாது-இருக்கவும் மாட்டான். சீரிய கவிஞன் என்பவன், தான்மட்டும் வாழவிரும்புவதில்லை. தன்னுடன் மற்றவர்களையும் வருந்திக் கூவியழைத்துத் தன்னுடன் வெளிப்படையாகவே வாழப் பாட்டிசைக்கிறான். இந்தத் தத்துவத்தில் பாரதியார் பிசகவேயில்லை. 'ஆடுவேனே பள்ளுப் பாடுவேனே" என்று ஒருமையில் பாடவில்லை. 'ஆடுவோமே பள்ளுப் பாடுவோமே" என்றே பன்மையில் பாடி சமூகத்தை விழிப்படையச் செய்து தானும் கலந்துகொண்டார். இது சீரிய கவிஞன் தனிப்பண்பாடாகும். எல்லாரையும் இன்பத்திற்கே அழைத்துச் சென்று அவர்கள் களியினிலே தானும் ஒன்றி விடுவதுதான் உண்மைக் கவியின் மேதாவிலாசமாகும். மேலே கூறப்பட்ட பண்பு நம் பாரதியாரிடம் நன்கு அமைந்து இருந்ததென்பதற்குச் சான்றாக, தான் பக்தி செய்யும் சக்தியிடம் சில வரங்களை வேண்டுகிறார்; தனக்கு அல்ல, பிறர்க்குத்தான். வரம் கோரும் வீறு சிந்திக்கத்தக்கது.



"செல்வம் எட்டும் எய்தி—நின்னால்
செம்மையேறி வாழ்வேன்;
இல்லை என்ற கொடுமை—உலகில்
இல்லையாக வைப்பேன்;
முல்லை போன்ற முறுவல் காட்டி
மோக வாதை நீக்கி
எல்லையற்ற சுவையே!—எனை நீ
என்றும் வாழவைப்பாய்"

என்று வேண்டும் வரப்பாட்டு மிக எளிதுதான், விளக்கம் தேவை இல்லை. உணரவேண்டியதுதான் பிரதானம்,

பக்தியின் முதிர்ச்சியான நிலையாதுஎன்றால், எங்கும் "அவன்" நிறைவை உணர்வதுதான்; நன்மை தீமைகள் இரண்டும் ஒன்றே என எண்ணும் சகஜ சமாதிநிலை சாமான்யமாகக்கைவரத்தக்கதல்ல. பக்தியில் முதிர்ந்த திருமங்கை மன்னன் எல்லாம் "எந்தை" என்பது அவர் வாக்கு "நோக்கும் திசையெல்லாம் நாமன்றிவேறில்லை" என்பதுதான் பக்தியின் சாரமாகும். இதே உயர் நோக்கை, பாரதியாரின் "பகைவனுக்கு அருள் வாய்" என்ற பாட்டில் ஜீவநாடியாகத் தோன்றும். "கொல்லவரும் புலியினையும் அன்னை பராசக்தி அவ்வுருவென்று அதனைக் கும்பிடுவாய் நன்னெஞ்சே!" என்ற வரிகளில் மேற்சொன்ன சமத்துவ எண்ணம் எவ்வளவு தூரம் விரிந்துள்ளது என்பது சிந்தித்துக்கொண்டே இருக்கவேண்டிய தொன்றாகும்.

மிகச் சிறந்த பக்தனுக்கு, கடவுளை வணங்கத் தனியானதொரு இடம் வேண்டும் என்பதில்லை. அறிவாகி மலரும் அவனைக்காண தனியிடம் எதற்கு? இந்தப் பொருளை நன்கு உணர்த்தும் தன்மை

யையும் முருகன் பாட்டிலே கூறுகிறார். அவர் முருகனை நேரே பார்த்திருக்கிறார் எங்கே? நாசசக்திகளைத் தொலைப்பதற்குத் தீப்பொறிகளை உமிழ்ந்து கொண்டிருக்கும் வெற்றிவேலுடன் அருளாகின்று உலகை வாழ்விக்கும் தாய் பராசக்தியின் மடிமேல் அமர்ந்திருக்க. அறிவாகிய. சோயிலில்தான் காண்கிறார். அந்தப் பொருளாளனை வணங்கி அடியார் கூட்டம் (உலகம்) புதுவாழ்வு பெற்று, புவிமீது சிறக்க அருள்வாய். என்று வேண்டுகிறார்.

' அறிவாகிய கோயிலிலே
அருளாகிய தாய் மடிமேல்
பொறிவேலுடனே வளர்வாய் அடியார்
புதுவாழ் வுறவே புவிமீது அருள்வாய்"

என்று பாட்டிசைக்கிறார்.

இயற்கையின் எழில் வளத்திலே ஈடுபடாத கவிஞர்யாருமில்லை நம் அமரகவியும் இதற்கு விலக்கல்லவே! ஆனால், பாரதியார் கண்ட இயற்கையில் பக்தி கலந்தது. அவர் கூறும் இயற்கையின் தோற்றமெல்லாம் தெய்வீகம் தோய்ந்தே காணப்படுகிறது.

"காலை இள வெயிலின் காட்சி—அவள்
கண்ணொளி காட்டுகின்ற மாட்சி;
நீலவிசும் பினிடை இரவில்—சுடர்
நேமியனைத்தும் அவள் ஆட்சி"

என்று இளம் பரிதியின் கதிரிலும். நீலவானத்திடை இலங்குகின்ற சுடர்களிலும் அவள் தன்மையையே புலப்பட வைக்கிறார். (பாரதியார், கடவுளை அன்னை என்றுதான் பல இடங்களில் குறித்துச் சொல்லுகிறார். இங்கு அவள் என்று குறிப்பிட்டது அதுதான்.)

கடைசியாக, தன்னுடையசமரசமான தெய்வக்கொள்கையை வெளியிட்டுப் பாடியிருப்பது, வலிந்து வாது செய்யும் சமயப்பிரிவினையாளர்க்கு ஒரு சவால்போல அமைந்திருக்கிறது. "என்மத தெய்வம் பெரிது; என அந்தந்த மதத்தை உயர்த்தும் பொருட்டு, பிறமதத்தை நாம்கொண்டவெறியால் சீறி, வாய்ப் போரிடும். "பெரியோர்கள்" சற்றுச் சிந்தித்துப் பார்ப்பது நலம் பயக்கும்,

---

ஓம்,

# ஸ்ரீமத் சுவாமி சிவானந்தஜீ மகாராஜ்

அவர்கள்

## தமது 68வது பிறந்ததினத்தையொட்டி மக்களுக்கு விடுத்த நற்செய்தி.

## அமைதியும் ஆனந்தமும் அடைவிக்கும் திறவுகோல்.

***திவ்விய ஜீவனச் சுடரொளிப் பிழம்புகளே!***

எனது தாழ்மையான வணக்கமும் வாழ்த்தும் உங்கள் எல்லோருக்கும் உரித்தாகுக!

நீங்கள் ஒளியின் ஒளி. சூரியன், சந்திரன் நட்சத்திரங்கள் எதினின்றும் ஒளியைக் கடன்வாங்கிப் பிரகாசிக்கின்றனவோ அது— அந்தமேலான நுண்ணறிவு—அந்த ஆத்மபோதம் உங்கள் உள்ளத்தின் ஆழத்தில் இருக்கின்றது. நீங்கள் இந்த அழியும் உடலல்ல; 'நான்' என்று அழைக்கும் இந்த அற்பப் பொருளல்ல நீங்கள்: அப்படி ஒன்றுமேயில்லை, நீங்கள் அழிவற்றதும், என்றும் சாசுவதமானதும், பேரானந்தமுடையதுமான ஆத்மா அல்லது பிரம்மம் ஆவிர். அதன் உண்மையான இயல்பு சத்-சித்—ஆனந்தம் (உண்மை. அறிவு, இன்பம்) ஆதலால் எழுமின்! விழிமின்! நீங்கள் யார் என்பதை உணருமின்! அதுவே உங்கள் வாழ்க்கையின்இலக்காகும்

ஆத்மாவின் இயல்பென்ன? யஸ்மின் சர்வாணி பூதானி ஆத்மைவ பூத் விஜானத: ததாகோ மோக: கஹ் சோக: ஏகத்வ மனுபஸ்யதி, உலகத்தில் நிலைபெற்றுக் காணப்படுவன வெல்லாம் உலகள் ஆத்ம சொரூபமே ஒழிய வேறொன்றுமல்ல, இவ்வுண்மையை நேரடியாக உணருவீராயின் நீங்கள் எல்லாவிதமான மயக்கத்தினின்றும் துன்பத்தினின்றும் விடுபட்டவராவீர். அதுவே உங்கள் வாழ்க்கையின் இலக்காகும்,

இந்த உலகத்திலேயே இப்பொழுதே நீங்கள் இந்தப் பயனை அடைய விருப்பமில்லையா? மயக்கத்தினின்றும் துன்பத்தினின்றும் ஒரேயடியாக விடுதலைபெற்று இன்பமடைய உங்களுக்கு விருப்பமில்லையா? நீங்கள் இந்த இலக்கை மிக எளிதில் அடையலாம்,

கடவுள் அளப்பருங் கருணை நிறைந்தவர், உங்களுக்கு உபதேசிக்கவும், வாழ்க்கையின் இலக்கை அடைவதற்கு வழிகாட்டவும் எத்தனையோ ஆயிரம் வழிகளில் கடவுள் உங்களிடத்தில் வருகின்றார்.

ஆத்மாவைத் தட்டி எழுப்பும் அனுபவங்களாக அவர் உங்களிடம் வருகின்றார், உங்களைச் சுற்றி நீங்கள் காண்பதென்ன? பிறப்பு, இறப்பு, முதுமை, நோய், துயரம் என்பனவாகும், இலௌகீக வாழ்வின் இயல்பை உணர்த்துவதற்கு இவைகள் உங்களிடையே விளங்குகின்றன. அதுமட்டுமல்ல, இவைகள் தெய்வீக வாழ்வில் இட்டுச் செல்லத் தூண்டுகோலாயும் உள்ளன, ஆதலால் இவையெல்லாவற்றையும் கடந்து நீங்கள் விழித்தெழுந்து நித்திய சமாதானத்தையும், அழியா இயல்பையும் இடையறாத பேரானந்தத்தையும் அனுபவிப்பீர்களாக,

முனிவர் உருவிலும், துறவிகள் உருவிலும் பரிசுத்தவான்களின் வார்த்தை உருவிலும் அவர் உங்களிடையே வருகின்றார், அழிந்துபோகும் இந்த உலகப்பொருள்களிலல்ல, கடவுளிடத்திலேயே—கடவுளுண்மையை உணருவதிலேயே—உண்மையான இன்பமுண்டு என்பதை அவர்கள் எல்லோரும் தங்கள் சாதனைகள் மூலமும் போதனைகள் மூலமும் திரும்பத் திரும்ப உங்களுக்கு நினைவூட்டுகின்றார்கள். எல்லாவற்றையும் துறந்து நித்திய சமாதானத்தையும் அழியாத தன்மையையும் இடையறா இன்பத்தையும் அனுபவியுங்கள் துறத்தல் என்பது இமாலயத்திலுள்ள குகைகளுக்கு ஓடிவிடுவதல்ல, பரவைராக்கியத்தை நாடுகிறவர்களே அப்படிச்செய்வதற்கு தகுதியுடையவர்கள், மற்றவர்களைப் பொறுத்தமட்டில் அது கோழைத்தனமேயாகும், வைராக்கியமுள்ள பக்தனே! எழுந்திரு! நான் என்னும் அகந்தையை ஒழி! நீ எங்கெங்கே ஓடுகின்றாயோ அங்கங்கெல்லாம் அதுவும் உன்னுடன் ஓடிக்கொண்டே வரும். நீ எங்கே இருக்கின்றாயோ அங்கு இருந்துகொண்டே அதனை அழித்தல் வேண்டும். நான் என்னும் அகந்தையை ஒழித்தல் என்பது மனித சமுதாயத்துக்கு தன்னையே தியாகஞ்செய்யும் சேவைசெய்தல், ஜெபம் கீர்த்தனை தியானம் என்பவைகளினால் தன்னைப் பரிசுத்தமாக்குதல் வேதாந்த நித்தியாசனம் மூலம் தன்னை விசாரித்து தத்துவம் களைதல், தன்னைத்தான் உணர்தல் என்பனவாகும், அப்பொழுது நித்திய சமாதானத்தையும் அழியாத தன்மையையும் இடையறா இன்பத்தையும் அடைவாய்,

சேவைசெய்; சேவைசெய்; நான் என்ற அகந்தை இன்றி, பிரதி உபகாரம் கருதாது சுயநலமின்றிச் சேவை செய். "எல்லா நாமங்களுக்கும் உருவங்களுக்கும் அடிப்படையில் இருப்பது எனது ஆத்மா. எனது ஆத்மா அல்லது கடவுளே எல்லாரிடத்திலும் உள்ளது, அந்தக் கடவுளுக்கே நான் சேவை செய்கின்றேன். இதுவே கடவுளுக்கு நான் செலுத்தும் துதி. இதுவும் என்னிடமுள்ள கடவுளின் சக்தியினாலேயே முடிகின்றது," என்று இவ்வாறு எப்பொழுதும் உணர். தன்னைத்தான் உணர்ந்து கொள்ளுவதற்கு இதுவே மிகச் சக்திவாய்ந்த சாதனமாகும். இன்றே அதனைச் சாதனையில் கொண்டு வருக, நீ நித்திய சமாதானத்தையும் அழியா வாழ்வையும் இடையறாத பேரின்பத்தையும் விரைவில் அடைவாய்,

ஒழுங்கான ஆசனப்பயிற்சிகள், பிராணாயாமம், சூரிய நமஸ்காரம், சாத்வீக உணவை உட்கொள்ளுதல் ஆகிய இவைகளின்மூலம் சரீரத்தைச் சுகமாக வைத்துக்கொள்ளுங்கள், எப்பொழுதும் உயர்ந்த எண்ணங்களை வரவேற்று மனதைச் சுறுசுறுப்பாகவும், விழிப்பாகவும், அமைதியாகவும் வைத்துக்கொள்ளுங்கள். தியானம்செய்தல், அருள்நூல் ஓதுதல் இவைகளின்மூலம் உங்கள் நுண்ணறிவைக் கூர்மையாகவும் செப்பமாகவும் வைத்துக்கொள்ளுங்கள். சேவை, தானம், ஜீவகாருண்யம் இவைகளின்மூலம் இருதயத்தை விரிவுள்ளதாகவும், தயையுடையதாகவும், சகிப்புத்தன்மையுடையதாகவும், பரிசுத்தம் வாய்ந்ததாகவும் வைத்துக்கொள்ளுங்கள். கடவுளை இடையறாது நினைப்பதன் மூலமும் அவர் நாமத்தை இடைவிடாது உச்சரிப்பதன் மூலமும் உலகிலுள்ள சகல கணங்களிலும் கடவுள் ஒருவரே உள்ளார் என்பதை உணர்வதன் மூலமும் உங்கள் ஆத்மாவை மிக்க பிரகாசம் உள்ளதாய் வைத்துக்கொள்ளுங்கள், இதனால் நீங்கள் இவ்வுலகிலேயே இப்பொழுதே வாழ்க்கையின் இலக்கையடைந்து நித்திய சமாதானத்தையும் அழியாத வாழ்வையும் இடையறாத பேரின்பத்தையும் பெற்றவர்கள் ஆவீர்கள்,

சுகமும், நீண்ட ஆயுளும், சமாதானமும் சீரும், இடையறா இன்பமும் பெற்று வாழ ஈசன் உங்கள் எல்லோர்க்கும் இன்னருள் புரிவாராக,

**சுவாமி சிவானந்தர்.**

# சிவானந்த வணக்கம்.

1 வசந்தப் புட்கள் கவிபாட,
மலர்க்கன் னியர்கள் மணம்பரப்ப,
இயற்கை யன்னை எழில்நடனம்
இசைக்கும் ரிஷிகே சத்தில், இன்பம்
பயக்கும் ஆனந் தக்குடிலைப்
படைத்தோய்! பேராங் கிலவாணி
வியக்கத் தத்வ சாரமெலாம்
விளக்கும் தமிழ்வித் தக, போற்றி!

2 நெஞ்சில் வஞ்சகக் கனல்வளர,
நீறு பூத்த மேனியுடன்,
பஞ்சை யுலகை ஏமாற்றும்
பகட்டுச் சாதுக் கூட்டமெல்லாம்,
அஞ்சி யொடுங்கப், புலவேடம்
அடங்க, அகந்தை யறுத்து, தவப்
பஞ்சாக் கினிமத் தியில்ஒளிரும்
பரமா னந்தச் சுடர் போற்றி!

3 இரத்த வெறியால் உலகையெல்லாம்
நாசப் படுத்தும் குண்டரக்கன்
செத்து மடிய, அன்புறவில்
செழித்துப் புவியின் வாழ்வோங்க,
சுத்த ஆன்மச் சுடர்வாளைச்
சுழற்றி யெழுந்த சிவானந்த
நித்திய ஜோதி! மாசற்ற
நிமல வடிவே. நீவாழ்க!

"பரமஹம்ஸ தாசன்"

# செய்தித்திரட்டு.

## ஸ்ரீ சுவாமி சிவானந்தர் ஜயந்தி விழா.

ஷை விழா கொள்ளுப்பிட்டி, டீல் இடம், 60ம் இலக்க வீட்டிலும், குருநாக்கல் செல்வஸ்தானிலும் திரிகோணமலை சிவானந்த தபோவனத்திலும். ரத்தோட்டையைச் சேர்ந்த மாணிக்கவள்ளி தோட்டத்தில் ஸ்தாபித்துள்ள அருட்பெருஞ்சோதி நிலையத்திலும், பண்டாரவளையைச் சேர்ந்த இராஜாத்தோட்டத்திலும், வதுளையிலுள்ள வங்கி இல்லத்திலும் மிகச் சிறப்பாகக்கொண்டாடப் பெற்றது. அத்தருணம் பல அறிஞர்கள் சுவாமிகளின் வாழ்க்கைபற்றி சொற்பொழிவாற்றினர். பிரார்த்தனைகள் மிக விசேடமாக நடைபெற்றன,

## நாம லிகித ஜெப யாகம்.

இந்த யாகத்தில் பங்குபற்றும் அன்பர்களின் தொகை அதிகரித்துக் கொண்டே வருகின்றது. 10-8-54 வரையில் ஆனந்தாச்சிரமத்துக்கு அனுப்பப்பட்ட கொப்பிகளின்படிக்கு 133,132,844 நாமங்கள் அன்பர்களால் எழுதியனுப்பப்பட்டுள்ளன. அன்பர்களின் தொகை 4077 ஆகும்.

## பின்வரும் புத்தகங்கள் ஆத்ம ஜோதி நிலயத்திற் கிடைக்கும்.

| | | ரூ. ச. |
|---|---|---|
| 1 | சிவானந்தலஹரி | 7-00 |
| 2 | திருவாசகம் | 15-00 |
| 3 | திருமந்திர விளக்கம் | 2-50 |
| 4 | நமது சமய விளக்கம் | 25 |
| 5 | கவிக்கனவுகள் | 1-80 |
| 6 | நாகரீகப் பண்ணை | 2-30 |
| 7 | உலகை உய்வித்த உத்தமன் | 1-00 |

தபாற்செலவு தனி,

Regd. at the G. P. O. As a News Paper H. C. 59-500


## "ஆத்ம ஜோதி" ஆயுள்சந்தா

ஆதரவாளர்கள்.

முகாந்திரம் S. கார்த்திகேசு திரிகோணமலை
திரு. T. உருத்திரா திரிகோணமலை
திரு. S. T. அரசு திரிகோணமலை
திரு. M. தாமோதரம் பிள்ளை உப்புவெளி, திரிகோணமலை
A. M. P. S. செல்லசாமி நாடார் & கோ., லோவர் வீதி, வதுளை

## மணிவாசக மலர்.

இஃது, கோவை–பேரூர் நால்வர் மடாலய
**வெள்ளிவிழாவின் நினைவாக**
எஸ். சுப்பராயன் அவர்களால் தொகுக்கப்பெற்று
திருமந்திரமணி, துடிசைகிழார், அ. சிதம்பரனுர்
அவர்களால்
பார்வையிடப்பட்டுப் பதிப்பிக்கப்பெற்றது.
*மலர் கண் கவர் வனப்புடன் சிறந்தமுறையில்*
*வெளிவந்துள்ளது.*

**விலை 1 ரு. 4 அ.**

**நால்வர் மடாலயம்**. பேரூர், கோயமுத்தூர், தெ. இந்தியா

## அருள் விருந்து.

**சென்னை. பிரம்பூர் சத்சங்க ஆண்டுமலர்.**

திருப்புகழ்மணி, அ. சீனிவாச ராகவன், கி.வா.ஜகந்நாதன்
பி. ஸ்ரீ. ஸ்ரீ முருகதாஸ் போன்ற பெரியார்கள்
பதின்மரின் கட்டுரைகளுடன் விளங்குவது.
வேண்டுவோர் "ஆத்ம ஜோதி" நிலையத்திற்கு ஒரு ரூபா
அனுப்பிப் பெற்றுக்கொள்ளவும்.


சரவணா அச்சகம். நாவலப்பிட்டி 17-9-54